ஒன்பதாம் வகுப்பு -கணக்கு -வடிவியல்-ஒரு மதிப்பெண் தேர்வு

ஆக்கம்: கோ.இளவரசு M.A.,M.Sc.,M.Phil.,B.Ed., B.T.Asst.,
Kamarajar Municipal High School,Melacauvery,Kumbakonam


## பயிற்சி 4.7

5UG69


### பலவுள் தெரிவு வினாக்கள்

1. முக்கோணத்தின் வெளிக்கோணம் எந்த இரு கோணங்களின் கூடுதலுக்குச் சமம்?
   (1) வெளிக்கோணங்கள் (2) உள்ளெதிர்க்கோணங்கள்
   (3) ஒன்றுவிட்ட கோணங்கள் (4) உள் கோணங்கள்


2. நாற்கரம் $ABCD$ இல் $AB = BC$ மற்றும் $AD = DC$ எனில், கோணம் $\angle BCD$ இன் அளவு
   (1) $150°$ (2) $30°$ (3) $105°$ (4) $72°$





3. சதுரம் $ABCD$ இல் மூலை விட்டங்கள் $AC$ மற்றும் $BD$ ஆனது $O$ இல் சந்திக்கின்றன எனில், Oவை முனையாகக் கொண்ட சர்வசம முக்கோணச் சோடிகளின் எண்ணிக்கை
   (1) 6 (2) 8 (3) 4 (4) 12




4. கொடுக்கப்பட்டுள்ள படத்தில் $CE \parallel DB$ எனில், $x^o$ இன் மதிப்பு
   (1) $45°$ (2) $30°$ (3) $75°$ (4) $85°$




5. கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் சரியானது எது?
   (1) $\Delta ABC \cong \Delta DEF$ (2) $\Delta ABC = \Delta DEF$
   (3) $\Delta ABC \cong \Delta FDE$ (4) $\Delta ABC \cong \Delta FED$




6. சாய்சதுரத்தின் மூலைவிட்டங்கள் சமமெனில் அந்தச் சாய்சதுரம் ஒரு
   (1) இணைகரம் ஆனால் செவ்வகம் அல்ல (2) செவ்வகம் ஆனால் சதுரம் அல்ல
   (3) சதுரம் (4) இணைகரம் ஆனால் சதுரம் அல்ல

7. நாற்கரம் $ABCD$ இல் $\angle A$ மற்றும் $\angle B$ இன் இருசமவெட்டிகள் $O$ இல் சந்திக்கின்றன, எனில், $\angle AOB$ இன் மதிப்பு

   (1) $\angle C + \angle D$ (2) $\frac{1}{2}(\angle C + \angle D)$ (3) $\frac{1}{2}\angle C + \frac{1}{3}\angle D$ (4) $\frac{1}{3}\angle C + \frac{1}{2}\angle D$

8. ஓர் இணைகரத்தின் உள் கோணங்கள் $90°$ எனில், அந்த இணைகரம் ஒரு
   (1) சாய் சதுரம் (2) செவ்வகம் (3) சரிவகம் (4) பட்டம்

9. பின்வருவனவற்றுள் எந்தக் கூற்று சரியானது?
   (1) இணைகரத்தின் எதிர்க் கோணங்கள் சமமல்ல.
   (2) இணைகரத்தின் அடுத்துள்ள கோணங்கள் நிரப்பிகள்.
   (3) இணைகரத்தின் மூலைவிட்டங்கள் எப்பொழுதும் சமம்.
   (4) இணைகரத்தின் இரு சோடி எதிர்ப்பக்கங்கள் எப்பொழுதும் சமம்.

LIVEWORKSHEETS

10. முக்கோணத்தின் கோணங்கள் $(3x{-}40)^\circ$, $(x+20)^\circ$ மற்றும் $(2x{-}10)^\circ$ எனில் $x$ இன் மதிப்பு


(1) $40^\circ$ (2) $35^\circ$ (3) $50^\circ$ (4) $45^\circ$

11. $O$ வை மையமாகக் கொண்ட வட்டத்தில் சம நீளமுள்ள நாண்கள் $PQ$ மற்றும் $RS$. மேலும், $\angle POQ = 70^\circ$ எனில், $\angle ORS =$ ________

(1) $60^\circ$ (2) $70^\circ$ (3) $55^\circ$ (4) $80^\circ$

12. ஆரம் 25 செமீ உள்ள வட்டத்தின் மையத்திலிருந்து 15 செமீ தூரத்தில் உள்ள நாணின் நீளம் _________

(1) 25செமீ (2) 20செமீ (3) 40செமீ (4) 18செமீ





13. படத்தில் வட்டமையம் $O$ மற்றும் $\angle ACB = 40^\circ$ எனில், $\angle AOB =$ _______

(1) $80^\circ$ (2) $85^\circ$ (3) $70^\circ$ (4) $65^\circ$


14. வட்ட நாற்கரம் $ABCD$யில், $\angle A = 4x$, $\angle C = 2x$ எனில், $x$ இன் மதிப்பு

(1) $30^\circ$ (2) $20^\circ$ (3) $15^\circ$ (4) $25^\circ$




15. படத்தில் வட்டமையம் $O$ மற்றும் விட்டம் $AB$ ஆகியன, நாண் $CD$ ஐப் புள்ளி $E$ இல் இருசமக் கூறிடுகின்றன. மேலும், $CE = ED = 8$ செமீ மற்றும் $EB = 4$ செமீ எனில், வட்டத்தின் ஆரம்

(1) 8செமீ (2) 4செமீ (3) 6செமீ (4)10செமீ





16. படத்தில் $PQRS$ மற்றும் $PTVS$ என்ற இரண்டு வட்ட நாற்கரங்களில் $\angle QRS = 100^\circ$எனில், $\angle TVS =$

(1) $80^\circ$ (2) $100^\circ$ (3) $70^\circ$ (4) $90^\circ$

17. வட்ட நாற்கரத்தின் ஒரு கோண அளவு $75^\circ$ எனில், எதிர் கோணத்தின் அளவு

(1) $100^\circ$ (2) $105^\circ$ (3) $85^\circ$ (4) $90^\circ$





18. படத்தில் வட்ட நாற்கரம் $ABCD$ இல் பக்கம் $DC$ ஆனது $E$ வரை நீட்டப்பட்டுள்ளது. மேலும் $AB$ இக்கு இணையாக $CF$ வரைக. இங்கு $\angle ADC = 80^\circ$ மற்றும் $\angle ECF = 20^\circ$ எனில், $\angle BAD = ?$

(1) $100^\circ$ (2) $20^\circ$ (3) $120^\circ$ (4) $110^\circ$

19. $AD$ ஐ விட்டமாகக் கொண்ட ஒரு வட்டத்தின் ஒரு நாண் $AB$. இங்கு, $AD = 30$ செமீ மற்றும் $AB = 24$ செமீ எனில், வட்ட மையத்திலிருந்து $AB$ அமைந்துள்ள தூரம் _______

(1) 10செமீ (2) 9செமீ

(3) 8செமீ (4) 6செமீ.




20. படத்தில் $OP = 17$ செமீ, $PQ = 30$ செமீ மற்றும் $OS$ ஆனது $PQ$ இக்குச் செங்குத்து எனில், $RS$ இன் மதிப்பு.

(1) 10செமீ (2) 6செமீ (3) 7செமீ (4) 9செமீ

LIVEWORKSHEETS